ஸ்ரீ:

ஞானவித்யாப்ரகாசினி

இனிய தமிழ் மாதப் பத்திரிகை

தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக்கண்டார் — பாரதி.

மலர் 1. } ஏப்ரல்–1932. { இதழ் 7.

ஒற்றுமையின் உயிர் நிலை.

1 ஒற்றுமையாக உழைத்திடுவோம்—நாட்டில்
உற்ற துணைவராய் வாழ்ந்திடுவோம்
வெற்றுரைபேசித் திரியவேண்டாம்—இன்னும்
வீணாய்ப்புராணம் விரிக்கவேண்டாம்.

2 கூடி விருந்துண்ண வேண்டவில்லை—பெண்ணைக்
கொண்டு கொடுக்கவும் வேண்டவில்லை
நாடி எவரொடும் நட்பினராய்த்—தேச
நன்மைக் குழைப்பதில் நஷ்டமுண்டோ?

3 கீரியும் பாம்புமாய்ச் சண்டையிட்டு—ஜாதி
கீழென்றும் மேலென்றும் நாட்டிவிட்டு
பாரதத்தாய் பெற்றமக்க ளென்று—நிதம்
பல்லவி பாடிப் பயனெதுவோ?

4 வேதன் முகத்திலுதித்தவரே—இங்கு
மேலா யெழுந்த குலத்தினராம்!
பாதமதில் வந்த பாவியரே—இந்தப்
பாரிலிழிந்த அடிமைகளாம்!

5. வாயில் விஷமுண்டு பாம்பினுக்கு—கொட்டும்
வாலில் விஷமுண்டு தேளினுக்கு
தாயிற் சிறந்தபிரமனுக்கும்—இரு
தாளில்விஷமுண்டோ சாற்றுவீரே.

6. உச்சிமரத்தில் சுவைக்கனியும்—தூரில்
ஓடிப்படர்ந்தெழும் வேரதனில்
நச்சுக்கனியும் பழுத்த பலாமரம்
நானிலத்தெங் ஙமே கண்டதுண்டோ ?

7. ஜாதியிரண்டலால் வேறுளதோ—ஔவைத்
தாயின் உரையும் மறந்தனிரோ
ஆதியிறைவன் வகுத்ததுவோ—மக்கள்
ஆக்கியகற்பனை தானிதுவோ ?

8. நாயனர் வந்த திருக்குலத்தை—உயர்
நந்தனர் வந்த பெருங்குலத்தைத்
தீயகுலமெனத் தள்ளுவமேல்—அது
தெய்வம் பொறுக்கும் செயலாமோ ?

9. வேதியராலே மழைவருமேல்—வயல்
வேலைசெய்யாது விளைந்திடுமோ ?
வாதமெலாம் கட்டி வைத்திடுவோம்—ஒத்து
வாழ்வதை மேற்கொண் டுழைத்திடுவோம்.

10. வீட்டுக்குள் சண்டைகள் போடுவதேன்—கூரை
வெந்துவிழுவதும் கண்டிலீரோ ?
நாட்டுக்கு நன்மையை நாடுபவர்—இந்த
நாடகமாடல் நகைப்பலவோ ?

11 மானமே வாழ்வின் உயிர் நிலையாம்—அதை
மாசுறச் செய்தல் கொடுங் கொலையாம்
'ஈனஜாதி' யெனும் பேச்சினைப்போல்—நெஞ்சை
ஈர்ந்திடும் வாளொன்று வேறுளதோ?

12 மன்னுயிர்க்காக உழைப்பவரே—இந்த
மாநிலத்தோங்கும் குலத்தினர்கள்
தன்னுயிர் போற்றித் திரிபவரே—என்றும்
தாழ்ந்த குலத்தில் பிறந்தோரம்மா

—தேசிகவி நாயகன்.

மனிதனிற் கடவுள்.

(சுத்தானந்த பாரதி.)

(முன் 217-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

தனது மந்திரக்கோலால் மனிதரை அவரவரியல்பிற்கேற்ற விலங்குகளாக மாற்றிவிடுவது அவள் வழக்கம். ஒருநாள் ஓதேஸியனுடைய (Odysseus) வீரர்கள் அவளுடைய அரண்மனையில் விருந்துண்டனர்; பன்றிபோன்று பெருந்தீனி யிச்சையுடன் மொச்சு மொச்சென்று அவர்கள் உண்டதால், இந்த ஸெர்ஸி தனது மந்திரக்கோலால் அத்தனைபேரையும் பன்றிகளாக மாற்றிக் கொல்லையில்க் கொண்டுபோய் அடைத்துவிட்டனள். தற்போது பேராசையும், வீண்வம்புமாகக் காலம்போக்கும் பேதையரை ஒரு ஸெர்ஸியிருந்தால் நாய், நரி, பன்றி, காண்டாமிருகக் கூட்டங்களாகவே மாற்றிவிடுவாள். ஒருவன் சினந்துவிழும்போது, "நீ ஒரு மனிதனா?" என வினவுகிறோம்! நாணயமில்லாத ஒருவனைப்பார்த்து மனிதத்தன்மையற்றவனெனப் பழிக்கின்றனர். வஞ்சம்புரிவோன் நரி; மறைந்து தீங்கிழைப்போன் மலைப்பாம்பு. பிறர் வாழ்விற் பொறாமை கொண்டலைவோன் வெறிநாய்; புன்காமத்திற் பொதிந்து அழுக்குறுவோன் பன்றி; எடுத்ததற்கெல்லாம் சினப்பவன் ஊர்நாய். தன்னறத்தையும் நாட்டையும் பிறர் கற்பழிக்கப் பொறுத்திருப்போன் பொதிக்கழுதை. பிறர்புகட்டும் உண்மை நெறிகளைக் கேளாது தன் அகந்தையைப்பற்றியே மதங்கொண்டு தீங்கிழைப்போன் வெறிமதயானை. எங்கும் விளங்கும் உண்மைப்பொருளை அறிவாற் காணாது பிதற்றுவோன் பகற்கூகை. தன் முயற்சிவிடுத்து பிறர்பொருளை வெளவுவோன் கழுகு. சோம்பித் தூங்கி மயங்குவோன் தேவாங்கு. கேவலம் புறவிழிகளால் பார்த்து, நலமறியாது மயங்கும் மனிதனே! உனது தூலவுடலுக்கும், உயிருக்கும் உள்ளே ஒரு உண்மைப்பொருள் நிலவுகிறது. அதையறியாது மனம்போனபடி நீ வாழ்ந்து ஏன் உனது மனிதத்தன்மையை விலங்குப்படிக்குத் தாழ்த்துகின்றாய்? உன்னைவிட சுதந்திரமாக விலங்குகள் உண்டுறங்கிக் குட்டிபோட்டுக் கட்டின்றி வாழுகின்றன. உன்னுள்ளே மூச்சினும் அருகேயுள்ள எல்லாம் வல்ல பொருளை யறியாது, உன் அகந்தையையே பற்றி எத்தனைநாள் திரிவாய்? மனிததத்துவத்தை அறிவாயாக.

மனிதன் தன்னுணர்வுள்ளவன் (self-concious). மனிதன் தன்னலத்தை விடுத்துத் தன்னைப் பொதுநலக் கருவியாயறிகிறான். கட்புலன், செவிப்புலன்களைக் கடந்த வுலகினின்று தான்வேறு. தன்னுள் அகனினும் ஒரு பெரிய செம்பொருளுள்ளதென்றறிகிறான். திமிங்கிலத்திற்குத் தன்னிறையில் 300-ல் ஒரு பங்குதான் மூளை; யானைக்கு 100-ல் ஒரு பங்கு; மனிதன் ஒருவனுக்கே தனது நிறையில் 45-ல் ஒரு பங்கு மூளையுள்ளது. மனிதனுக்கு ஒரு பெரிய மூளை ஏன் கொடுக்கப்பட்டது? தன்னிறிவால் சாதாரணப் புலனறிவிற்கெட்டாத ஒரு உட்பொருளை உள்ளும்புறமும் கண்டு களிப்பதற்கன்றோ! அன்பு, அறம், நன்றி, ஒப்புரவு, நாண், கற்பு, உண்மை, பொறுமை, சீர்மை, முதலிய உயர்தன்மைகளை வளர்த்து, கடவுட்படிக்கு உயரவன்றோ? தனது அறிவை மென்மேலும் உயர்த்தி விலாசமாக்கி, உள்முகப்படுத்தி அதன் உன்னதப்பொருளான கடவுளைத் தெளிதலின்றி, அகந்தையும், வீண்வாதமும், பொறாமைப்போரும், சச்சரவும் விளைப்பதில் மனிதன் மூளையை வீணாக்கினால் அதைவிட மடமை வேறுண்டா! தன்னை அறிவால் ஆன்மாவாகத் தெளியாதவன் தற்கொலை செய்துகொண்டவனாகிறான். வீட்டில் தேவாமிருத மிருக்கையில் புறத்தே அழுகல்களைப் பொருக்கித்தின்ன அலைபவன் எத்தகை மூடனாயிருக்கவேண்டும்?

"சத்தியமும் நோன்புந் தவமும் இளஞ்சொல்லும்
உத்தமருக் குள்ளகுண மொன்றின்றி—மத்தியராய்
மைதுனமுஞ் சோறும் மாயுமள வும்புசிக்குங்
கைதவர்க்கு முண்டோ கதி?"

என்றார் வள்ளலார்.

"உண்டியே உடையே யுகந் தோடிடும்
மண்டலத் தொடுங் கூடுவ தில்லையான்"

என்றார் குலசேகரப் பெருமான்.

மனிதன் நீதிநெறியில் மனச்சாட்சிக்கு மாறின்றிக் கடவுளன்புடன் ஒழுகிக் கடவுட்டன்மைக்கு உயரும் வீரன். தினியும் முயக்குமே மனிதச் செயலல்ல.

தீனி முயக்கினிலே
செல்லாதுன் வாழ்க்கையே
ஞான முயற்சி வழி நாடு.

என்றுங் த, ஞானமுயற்சியே மனிதன் வேலை. அதுவே மனித வாழ்வை மென்மேலும் தூய்மை யுறுத்தும். அறிந்த ஞானிகள் கூட்டத்தில்த்தான் தெய்விக ஒற்றுமையும், வீரசுதந்திரமும், பூரண ஸமத்வமும் நிலவும். "பண்டிதா : ஸமதர்சன :" எனும் கீதை. அறிஞரே அனைத்துயிர்களையும் ஒன்றென உண்மையாகக் காண வல்லவர். தன்னை யறிந்த ராமகிருஷ்ணபரமஹம்ஸர் தாழ்த்தப் பட்டவர். மனைகளையும் குப்பைகளையும் சுத்தஞ்செய்ததும், கிருஷ்ண சைதன்யர் ஒரு குஷ்டரோகியைக்கூட அன்புடன் தழுவி நலஞ் செய்ததையும் சிந்திப்போமாக. மனிதன் வீண்மைச் செருக்கை விடுத்து முதலில் தன்னைப் பரிபூரணப்படுத்திக்கொள்ளவேண்டும். மனிதன் என்பது, தோலல்ல; வீரியத்தினவல்ல; இந்திரிய சுகமல்ல; இரத்தத்திமிரல்ல; தசைக்கொழுப்பல்ல; வாய்வம்பல்ல; மனிதன் அறிவு; அவ்வறிவு கடவுள்மயம். அவ்வறிவைத் தெளிவு படுத்திக்கொண்டால் கடவுள் நிலவக்காணலாம்! காணலாம். தனியேயிருந்து சற்று சிந்தித்துப்பார்! எத்தனை எண்ணங்கள் உன்னைச் சூழுகின்றன. இவை ஒவ்வொன்றையும் ஆராய்! இது நானா! இது நானா! இது நித்யமா! நித்திய இன்பமா! என விசாரி: அவிசாரித்தனத்தை விடு; விசாரியாகி உன்னையே நீ சோதி: பின்னே நீ யாரென்பதும், என்ன செய்யவேண்டுமென்பதுந் தெரியும் அப்போதே நீ அறிவு, அறிவு கடவுள் மயம் கடவுளின் கருவியே நீ என்பதை நன்கு அறிவாய். மனிதன் உனது உண்மை நிலை சுத்த, சுதந்திர ஸமத்துவ சத்ய நித்யானந்தம். மனமயக்கினால் அதனின்றிழிந்து அலைகிறாய். உனது நிலை யறிந்து நில்! அவற்றில் ஆண்டவன் நிலவுகிறான். ஆனால் மனித நிலையினின்று அவனைக்காண முடியாது. அது அவனுடையசொல் மனங்கடந்தபொருள். அப்பொருளைச்சுற்றி ஐந்து கோட்டைகளுள்ளன. அக்கோட்டைகளைப்பற்றி ஆராய்வோம்.

ஐந்து கோசம்.

இக்கோட்டைகளே பஞ்சகோசம் என்பது. அதாவது முறையே அன்னமய கோசம் (உடல்), பிராணமய கோசம் (உயிர்), மனோமயகோசம் (மனது) விக்ஞானமய கோசம் (அறிவு) ஆனந்தமய கோசம் (பேரின்பம்) இக்கோசங்களின் தன்மைகளைத்தெளிக:-

* சாதிகுல நாமாதி யன்னகோசம்;
தரும்பசி தாகம் இன்னல் உயிரின் கோசம்;
வாதலின்சங் கற்பமொடு விகற்பம் யாவும்
மனக்கோச மருவிடும்; விஞ்ஞானகோசம்,
சாதுரியன் றலைவனெனுந் தன்மை தோற்றும்;
சாந்தன்பா னென்னுமானந்த கோசம்
ஈதெலாங் கருவியா யிவை கடந்தே
இலங்குகின்ற பெரும்பொருளை யிறைஞ்சுவோமே

சாதி, குலம், நிறம், உடை நடை முதலிய தற்காலச் சமூகச் சச்சரவுத்தீக்கு நெய்யூற்றி நிற்பதெல்லாம் அன்னமய கோச வேற்றுமைகளே. இக்கோசத்தை மனிதன் தன் திமிரினால் தீய செயல்களுக்குப் பயன்படுத்துகிறான். இக்கோசம் நன்கு பயன்படுத்தப்பட்டுத் தூய்மையுற்றால் மேலே பல வுண்மைகளை யடைய நற்கருவியாகும். புலாலும், மதுவும் பிறரை வஞ்சிக்க இரத்தவுணவும் போட்டடைத்து, பிறர் சமாதானத்தைக் கெடுக்குங் கொடுந்தொழிற்கே மனிதன் இதைப் பயன்படுத்துகிறான். கேவலம் அன்னமய வேற்றுமைகளைக் கொண்டு உலகில் எத்தனை ஜாதி, மத சமய சச்சரவுகள் விளைகின்றன. இக்கோசத்தினையே வாழ்வாக எண்ணுகின்றவன் மனித விலங்கே யாவான். இதன் ஆட்டங்களுக்கு இடந்தருவது பிராணகோசம். இதில் மனிதனுடைய பசி, தாகம், இன்னல், இன்பம், வாதனை முதலிய உணர்ச்சிகள் அடங்கியுள்ளன. இவ்விரு கோசங்களையும் ஒழுங்குறுத்தவே யோகம் ஏற்பட்டது. தீவழிச்செலுத்தாது ஆஸனப் பிராணாயாமாதி இயம நியம விதிகளால் வாழ்வை நெறிப்படுத்தினால் இக்கோசங்கள் வலுப்பட்டுத் தூய்மையுற்று, நீளாயுளும், பேராற்றலும் கொடுக்கும். மூன்றாவதான மனோமய கோசமே மனிதனின் இருக்கை. மனமெப்படி, மனிதனப்படி.

* இவை சாதாரணமாக தத்துவநூலிற் கூறப்பட்ட கோசங்கள். நமது யோகசம் வேதத்தில் விரிக்கப்பட்ட தெய்வசேதன பூமிகளையே கொண்டது. அதன் நுட்பம் பிராணாயாம காயித்ரியிலுள்ளது.

இம்மனது மயக்குந் தன்மையுடையது. இதன் எண்ணங்களால் தான் மனிதன் கட்டுகளுக்குள்ளாகிறுன். பண்டைவினை, முன்வினை, பின்வினைகளுக்கு மனிதனை உள்ளாக்குவது இம்மனமே யாகும்.

மனமதே தோற்ற வாதி
 மனமதே பற்றும்விடும்
மனமதே யெண்ண மாகும்
 எண்ணமே வலிய பந்தம்
மனமதே மாயா பாச
 மதிலென வொளி மறைக்கும்
மனதினை யுறுதி செய்தால்
 மற்றெருரு வெற்றி யேனே!

நமது இன்னல்களுக் கெல்லாங் காரணமான மனத்தைத் தூய்மைப் படுத்தி ஒன்றுபடுத்தி வென்றுல் அதன் ஆற்றல் அளவிறந்தது.

சினத்தோ டுலகைச்
 செயிப்பதினுந் தங்கள்
மனமடக்கி வாழ்தலே மாண்பு.

உலகவெற்றி அவ்வெற்றிக் கீடாகாது. ஆகாயத்தந்தி, தொலையொலி கேட்டல், தொலைப்பொருள் காண்டல், பிறர்மன மறிதல், பிறர் நோய் தீர்த்தல், வியன்செயற் செய்தல் முதலிய வெல்லாம் பழக்கிய மனத்தின் செயல்களே. மனத்தை நன்கு பழக்கவே இராஜயோகத்தில் வளிநிலை, தொகைநிலை முதலிய முறைகள் ஏற்பட்டுள்ளன. இம்முறைகளில் தேர்ந்தால் நம்முள்ளிருக்கும் மஹாசக்தி [குண்டலினி] எழும். மனத்தின் வடிவு நான் எனும் அகந்தை. அவ்வகந்தை அழிந்து எல்லாம் அவன் எனும் நிலை வந்தால் தான் அவனுடைய சக்தியான குண்டலி எழும். அஃதெழுந்த பின், மனிதனுக்கு வரவரத் தன்மறதியும், கீழியல்பின் நாடக முடிவும், கடவுளுணர்ச்சியும் ஏற்படும். அப்போதுதான் ஓங்காரவுட் பொருளும், தனிப்பொருளும், சிற்பொருளும், தற்பொருளும் ஒவ்வொன்றுக ஆற்புதத்திரை தூக்கித் தெய்வ நடனம்புரிந்து நமது மனக்கண்ணில் இலங்கும். இதன் முடிவு சமாதியும் தன்மறதியும், முற்றும் ஈரறக்கலந்த பேரின்பமுமேயாகும்.

ஆனால் மனதில் மட்டும் மனிதன் கடவுளைக்காண முடியாது. அடுத்தபடியான விக்ஞான கோசத்தில்தான் இராமலிங்க சுவாமிகள் சாகா மருந்தாகப் புகலும் அருட்பெருஞ் சோதியின் வாயிற்படியுள்ளது. அந்த விக்ஞான வெளி தான் தன்னறிவு. அதில்தான் தெய்வப்புலமையுள்ளது அதன் மீது தான் ஆண்டவன் ஆனந்த நடனம் புரிகிறான். சித்தம்பலத்தின் திருவிளக்கு அதுவே! அந்நிலையில் மனிதன் ஏறினால் ஆண்டவனின் லீலைகளை அறியலாம். அவனை உணரலாம். எனினும் ஆனந்த கோசத்திலே தான் சாந்தமாக, என்றுங்களித்து மனிதன் இருக்கலாம். சச்சிதானந்த வாழ்விற்குச் சென்று கடவுண் மயமாயிருத்தல் முடியும்.

இத்தகைத் திரைகளைக் கடந்து எழினும் இறைவனை மனிதன் தனது வாயாலும் மனத்தாலும் அறிய வொண்ணாத நிலையில் "கடவுளில்லை" யென்றால் அவனைக்கண்டு இரங்கவேண்டியதே மனிதனுடைய சிற்றறிவினால் முடியாததை மறுத்தல் 'திராட்சை புளிப்பென்று" நரி யோடிய கதையே யாகும். நரியாவது கண்டது. இவன் கனவிலுங் காணக்கூடாத வொன்றை இல்லையென்று உபதேசஞ் செய்யக் கிளம்புவது இருள், மாயம், மடமை, அகந்தை பகை, வேற்றுமை, எல்லாஞ் சேர்ந்த புன்மை! பித்த நோயாளன் பலாப்பழம் கசப்பென்னல் வியப்பா!

தெய்வ மனிதன்

தெய்வமனிதன் உணர்ச்சியே கடவுட் புலமை (Cosmic conscince) இது விக்ஞானகோசத்தாலடையும் அருட்பெருஞ்சோதியால் உண்டாவது. உடல், உயிர், மனம் இவற்றைக் கடந்தநிலையே தெய்வநிலை. இந்நிலையையடையா மனிதன் விக்ஞான கோசத்தில் உழைக்கவேண்டும். இதைத்தான் அகந்தையால் மனிதன் செய்ய முடிவதில்லை. இப்போது தான் மனிதன் தனக்கு எட்டாத ஒரு பொருளுணர்ச்சியை யடைகிறான். விசாரத்தால் உண்மையைப் பெறுகிறான்; தான் என்பதை மறக்கிறான். தற்போதமிழக்கிறான்.

(தொடரும்)

பங்குனி உத்தரம்.

(தமிழ்த் தொண்டன்.)

இச் சுபதினம் இராமபிரானுக்கும் சீதா பிராட்டிக்கும் திருக்கலியாணம் நடந்த சிறந்த தினமாகக் கருதப்படுகிறது.

"பங்குனி உத்தரமான பகற்போ (து)
*அங்கண் இருக்கினில் ஆயிர நாமச்
§சிங்கம் மணக்கொழில் செய்த திறத்கால்
மங்கல அங்கி வசிட்டன் வளர்த்தான்"

என்ற பாடல் கம்ப ராமாயாணப் புத்தகங்களில் சாதாரணமாகக் காணப்படுகிறது* பங்குனி மாசத்து உத்திர நட்சத்திரம் கூடியுள்ள அன்றைய தினத்திலெ, இராமன் திருமணச் சடங்கு நடந்தது. அப்பொழுது மங்களகரமான அக்கினி காரியங்களை வசிஷ்ட முனிவன் குறைவின்றிச் செய்து முடித்தான் என்பது குறித்த பாட்டின் பொருள்.

இத்தினத்தில் பலவகையான மங்கல ஒலிகள் எழுந்து முழங்கின என்று வருணிக்கும் கவிஞன்,

"ஆர்த்தன பேரிகைகள் ஆர்த்தன சங்கம்
ஆர்த்தன நான்மறை ஆர்த்தனர் வானோர்
ஆர்த்தன பல்கலை ஆர்த்தன பல்லாண் (டு)
ஆர்த்தன வண்டினம் ஆர்த்தன அண்டம்"

என்றுகூறிச் செல்லுகிறான். அத்தினத்தில் மங்கல பேரிகைகள் முழங்கின: சங்குகள் சப்தித்தன. வேதங்கள் கோஷித்தன. தேவர்கள் ஆரவாரம் செய்தார்கள்: மாதர்கள் பல்லாண்டு பாடினர். அற்பப்பிராணிகளான வண்டுகளும் ரீங்காரம் செய்து மகிழ்ந்தன. சுருங்கக் கூறுமிடத்து, அண்டகோடிகளெல்லாம் ஆனந்தமாக ஆரவாரம் செய்தன.

---

*அங்கண் = அவ்விடத்திலே. ¶ இருக்கினில் = வேதவிதிப்படி
§சிங்கம் = வீரன் * இது கம்பன் வாக்கு அன்று என்பது என்கருத்து.

இவ்வாறு வருணித்துவரும் கவிஞன் தன் வருணனைக் கிடையே,

'ஆர்த்தன பல்கலை'

அதாவது, பல கலைகளும் சீதா கல்யாண தினத்திலே சந்தோஷ ஆரவாரஞ் செய்தன என்று விசேஷமாகக் குறிப்பிடுவது கவனிக் கத்தக்கது.

இப்படிப்பட்ட நன்னாளிலே, பல் கலைச் செல்வனும் கவிச் சக்ரவர்த்தியுமான கம்பன் அருங்கலை விநோதர்களான ரஸிக மணிகளின் முன் தனது தெய்விகப் பெருநூலான இராமகதையை அரங்கேற்றினான். இவ்விஷயத்தை,

"எண்ணிய சகாத்தம் எண்ணூற்
றேழின் மேல் சடையன் வாழ்வு
நண்ணிய வெண்ணெய் நல்லூர்
தன்னிலே கம்ப நாடன்
பண்ணிய இராம காதை
* பங்குனி உத்தரத்தில்
கண்ணிய அரங்கர் முன்னே
கவி அரங் கேற்றினானே"

என்ற பாடல் தெரிவிக்கின்றது.

இப்பாடலை மேற் கோளாகக்கொண்டு சோழ மண்டல சதகம், அம்மண்டலத்தின் பெருமையைக் குறித்து,

"திண்மையேறும் கம்பனிடம்
செய்யத் தகும்பல் சிறப்பயர்ந்து
நண்மையேறும் இராமகதை
நற்பேர் புவியில் தழைத்தேற
உண்மையேறுந் திருவரங்கத்
தொருவன் சபையில் உத்தரநாள்
வண்மையேற அரங்கேற்றி
வைத்தார் சோழமண்டலமே"

என்று கூறுகின்றது.

---

* 'பங்குனி அத்தநாளில்' என்ற பாடபேதமும் உண்டு. இந்நாள் சீதா கல்யாணம் நிகழ்ந்ததாகக் கருதப்படும் பங்குனியுத் தரத்தின் மறுதினமாகும். இத்தினத்திலேதான கம்பராமாயணம் ஆரங்கேற்றியதென்று கருதுவோரும் உண்டு.

பங்குனி யுத்தரம் ஸ்ரீரங்கத்தில் பெரிய திருவிழா நாளாகக் கொண்டாடப்படுகிறது. முன்னாளில் இவ்விழாவிற்காக நமது நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பல்வேறு கலைகளில் பயிற்சி பெற்ற நல்லறிஞர்களும் ரஸிகர்களும் பக்தர்களும் திருவரங்கத்தில் வந்து கூடுவதுண்டு. அத்தகைய கூட்டம் ஒன்றில், தமிழ்க் கலைமகளின் கவிக் கிரீடமாகத்திகழும் இராமாயணத்தைக் கம்பன் அரங்கேற்றிப் பிரசுரஞ் செய்தான் என்று கொள்வது பொருத்தமுடையதே. அப்பொழுது அவ்விசேஷக் கூட்டத்தில் தலைமை பூண்டு வீற்றிருந்த பெரியார், சிறந்த ராம பக்தரும் பிரபல பரமரஸிகரும் ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்தத்தின் முதலாவது ஆசாரியருமான நாதமுனி யென்பது கர்ணபரம்பரை வரலாறு.

சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்குமுன், அரங்கநாதன் சந்நிதியிலே சீதா கல்யாண தினமாகிய பங்குனியுத்தர நன்னாளில் கம்பராமாயணம் அரங்கேறுதலாயிற்று. எனவே, பங்குனி யுத்தரத்திற்குச் சீதா கல்யாண தினம் என்ற பெருமையோடு, கம்பராமாயணம் அரங்கேற்றிய தினம் என்ற பெருமையும் உண்டு.

கம்பராமாயணம் அரங்கேற்றிய தென்றால், அதன்பொருள் என்ன? அதனால் பங்குனி யுத்தரத்திற்கு ஏற்பட்ட பெருமை யென்ன?

கம்பன் தன் இராமாயணத்தைத் தமிழ்ப் பெருமக்களின் பேரிதிகாசமாகவும் வீரகாவியமாகவும் இயற்றினான். இயற்றிய பின் இப்பெருநூலை அவன் தமிழ்ப் பொது மக்களுக்குப் பொது உடைமையாகவும் குலதனமாகவும் உரிமையாக்கி வெளியிட்டான். நமது தமிழ் நாட்டின் சரித்திரத்திலேயே கம்பர் ராமாயண அரங்கேற்றம் ஓர் தனிப்பெரு நிகழ்ச்சியாகத் திகழ்கின்றது. எல்லா அம்சங்களிலும் இந்நிகழ்ச்சியோடு ஒத்த சிறப்புவாய்ந்த நிகழ்ச்சி வேறொன்றும் இல்லை யெனத் துணிந்துகூறலாம்.

இதனை ஒருவாறு ஒத்திருக்கும் நிகழ்ச்சி, திருவள்ளுவர் திருக்குறள் இயற்றியதேயாகும். இவ்விரண்டு பெரு நிகழ்ச்சிகளும் தமிழ் இலக்கிய சரித்திரத்திலே அதி முக்கியமான மைல்கற்களாகக் கருதத்தக்கன. தமிழ்மக்களுக்கு வீரகாவியம் அளித்த பெருமை, கம்பன் பெருமை யென்றால் அறவுரைகளுக்கு ஒரு களஞ்சியமாகக் காணப்படும் தமிழ்வேதத்தை அருளிய பெருமை திருவள்ளுவர் பெருமையென்று சொல்லலாம்.

" வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு,"

என்று புகழப்பெறும் நாடு.

திருவள்ளுவர் தோன்றி ஆயிரம் ஆண்டுகள் கழிந்த பின், கம்பனைக் கவியுலகத்திற்குத்தந்த தெய்விகப் பெரும் புகழையும் சூடிக்கொண்டது. 'தெய்வ வள்ளுவன் வான்மறைகண்டதும்', தெய்வமாக் கவிஞனை கம்பன் தமிழர்க்குப் பேரிதிகாசமாகிய வீரகாவியம் தந்ததும், தமிழ்நாட்டின் தனிப்பெரும் புகழேயன்றோ? இவ்விரண்டு பெருநிகழ்ச்சிகளிலும்கூட, வீரகாவியம் வெளிவந்த நிகழ்ச்சி, தமிழ்வேதம் பிறந்த நிகழ்ச்சியைக்காட்டிலும் சில முக்கிய அம்சங்களில் அதிக விசேஷமானதென்று சொல்லலாம். இங்கே உதாரணம் ஒன்று காட்டுவோம்.

திருக்குறள், ஒரு சமரஸசன்மார்க்கவேதம்—தமிழ்ப்பெருமக்களின் பொதுமறை, திட்பமும் நுட்பமுமாக நமக்கு உறுதிபயக்கும் உண்மைகளை எடுத்துரைக்கின்றது. அது அரசனைப்போல்—அல்லது சட்டத்தைப்போல்—கண்டிப்பாக ஆணையிடுகின்றது. கம்பன் காவியமோ வாய்திறந்து கட்டளையிடுவதில்லை. தன் கடைக்கண்குறிப்பினால் காதலனை வசீகரிக்கும் காதலிபோலத் தமிழ்மக்களின் உள்ளங்களை வசீகரித்து மலரச்செய்கிறது.

இத்தகைய கம்பராமாயணம், வால்மீகிராமாயணத்தின் மொழிபெயர்ப்பன்று. கம்பராமாயணமும் வால்மீகிராமாயணத்தைப்போல் ஒரு புதிய சிருஷ்டியே. இந்நூல் கம்பனுக்கு உலக மகாகவிகளின் திருக்கூட்டத்தில் ஒரு முக்கியமான ஸ்தானத்தை அளித்திருக்கிறது. இச்சந்தர்ப்பத்தில், கம்பனது கதாநாயகன், திருவள்ளுவர் தமது தமிழ்வேதத்தில் வகுத்துரைக்கும் உத்தம வாழ்வின் பெருவிதிகளுக்கு நிலைக்களமாகிய புருஷோத்தமனாக விளங்குகின்றான்.

கல்வியிற்பெரிய கம்பன், கருவிலே திருவுடைய தெய்வமாக் கவிஞனாகவும், தமிழகத்தின் கவிச்சக்கிரவர்த்தியாகவும் விளங்கினான். இவன், இயற்கைப் பேரறிவான ஒப்பற்ற மேதாவிலாசத்தோடு, தன் காலத்து வழங்கிய கலைகள் பலவற்றிலும்—சிறப்பாக எல்லா அழகுக்கலைகளிலும்,—நிரம்பிய புலமையும் பெற்றிருந்தான். மனோதர்மம் சௌந்தரிய உணர்ச்சிமுதலிய பலவேறு நலங்களும்

கம்பனிடம் பரிபூர்ணமாக அமைந்து அவனுடைய கவித்வசக்தியை விசிறி, ஜ்வாலை செய்தன. சுருங்கக்கூறுமிடத்து, உத்தமப் பெருங்கவிஞனுக்கு இன்றிமையாத லட்சணங்கள் அனைத்தையும் இயற்கையன்னை கம்பன்பால் பொழிந்திருந்தாள் என்று கூறுதல் வேண்டும்.

" ஆதவன்புதல்வன் முத்தி—
அறிவினை அளிக்கும் அண்ணல்
போதவன் இராமகாதை
புகன்றருள் புனிதன் மண்மேல்
கோதவம் சிறிதும் இல்லான்
கொண்டல்மால் தன்னை ஒப்பான்
மாதவன் கம்பன் செம்பொன்—
மலரடி தொழுது வாழ்வாம் "

என்ற பாடல் கம்பன் எத்தகைய பரிசுத்தவாழ்க்கை வாழ்ந்திருத்தல் வேண்டும் என்பது ஒருவாறு புலனாகும். ' ஆதித்தன்புதல்வன் ஞானக்கம்பன் ' என்று வழங்குவதும் காண்க.

" பெற்று வளர்த்ததும் வித்தைதனைப்
பேணிக் கொடுத்தும் பெயர் கொடுத்தும்
பற்றவரும் பாலமுதளித்தும்
பகைத்த வறுமைப் பயம் தீர்த்தும்
கற்ற முதல்நூல்—திருவழுந்தூர்க்
கம்பன் தழையக் கருணை செய்தோர்
மற்றும் புலவோ ரையும் வாழ
வைத்தார் சோழ மண்டலமே "

என்ற பாட்டில் கம்பன் வாழ்க்கையின் முற்பகுதி எவ்வாறு கழிந்திருத்தல் வேண்டும் என்பது ஒருவாறு வெளியிடப்பெறுகின்றது. இத்தகைய சிறு குறிப்புக்கள் சிலவற்றைத்தவிர, கம்பனைப்பற்றி நாம் கேள்விப்படும் கதைகளில் பெரும்பாலன கட்டுக்கதைகளேயாகும்.

கம்பனது வாழ்க்கை வரலாற்றைக் குறித்து, ஒருவரும் எழுதிவைக்கவில்லை. ஜீவிய சரித்திரம் எழுதிவைக்கும் வழக்கம் நம் முன்னோர்களிடையே காணப்படவில்லை. ஆனால் அதற்காக நாம் வருந்துதல் வேண்டாம். நமது கவிஞனது உண்மையான வாழ்க்கைச் சித்திரம் அவனது வீரகாவியமான இராமாயணத்திலேயே காணப்படுகிறது. அவ்வாழ்க்கைச்சித்திரம், அக்காவிய அரண்மனையை அலங்கரிக்கும் பலவேறு கம்பச்சித்திரங்களின் இடையே காட்சி தருகின்றது. சுருங்கக் கூறுமிடத்து, கம்பனுடைய இராமசரிதத்தில் அவனுடைய சுயசரிதமும் ஒருவாறு விரவிக் கிடக்கின்றதென்னலாம்.

வாசகர்களே! கம்பனுடைய ஸ்தூலவாழ்க்கை சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் மறைந்துவிட்டது. ஆனால் அவனுடைய உண்மைவாழ்க்கை, அவனுடைய கொள்கைகள், கனவுகள், லட்சியங்கள்,—அவனுடைய கவியுள்ளம்,—கம்ப ராமாயணத்திலே என்றும் வாடாத உயிர்சித்திரங்களாக நம்கண்முன் வருகின்றன. கம்பனது காவிய உலகிலே நாம் கம்பனையே முக-முகமாகக் காண்கிறோம்.

" ஆசைபற்றி அறைய லுற்றேன் "

என்றும் கூறும் கவிஞன் இராமகதையைப் பாடவேண்டுமென்று எவ்வளவு ஆசைகொண்டிருந்தான் என்று யாரே அளவிட்டு உரைக்க வல்லார்? ' உண்ணும் நீரினும் உயிரினும் ' ஜனங்கள் இராமனையே காதலித்தார்கள் என்று கம்பன் கூறுகின்றான். இது கவிஞன் கதாநாயகன் மீதுகொண்ட காதலையும் காட்டுகின்றதென்னலாம்.

இத்தகைய கவிஞனது, அழகிய மன நிலையினை,

" ஆரேனையும் ஒன்றுசொல்லத்
தொடங்கினும் அவ்விடத்தான்
பேரே வரும்என்ன பேறு
பெற்றேன் பெருநான்மறையின்
வேரே மிதிலையின் மின்னொடும்
போய் வெய்ய கான் அடைந்த
காரே கடல் கொளுந் தச்சிலை
வாங்கிய காகுத்தனே "

என்ற அழகிய *செய்யுளிலிருந்து நாம் ஊகித்துக்கொள்ளலாம். இம்மனநிலையைத்தான்,

"பித்தர் சொன்னவும்
பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும்
பன்னப் பெறுபவோ?"

என்ற கம்பன் வாக்கில் தெளிவாகக் காண்கிறோம்.

இத்தகைய மன நிலைவாய்ந்த கவிஞன், தனது ஒப்பபற்ற கவியுள்ளத்தையும், முழு வாழ்க்கையும் தனது தெய்விகப்பெருங் காவியத்திற்கே உரிமையாக்கினன்—அர்ப்பணம் செய்தான்—என்று கருதுதல்வேண்டும்.

இக்கம்பராமாயணம் தமிழ்த்தெய்வத்தின் கவிக்கிரீடம்—உலகமகா காவியங்களில் ஒன்று. இப்பெருநூலை வெளியிட்ட தினம் ஒப்பற்ற புண்ணியதினமேயன்றோ? பங்குனியுத்தர நாளுக்குச் சீதாகலியாணம் என்ற பெருமையோடு, கம்பராமாயணம் அரங்கேறிய பெருமையும், ஏற்பட்டிருப்பதால், அது தமிழர், ஜாதி மதபேதம் கருதாது கொண்டாடத்தக்க தேசியப் பெருவிழா—நாள் ஆகும் என்பது திண்ணம்.

[குறிப்பு:—பங்குனி உத்தரத் திருநாள் முருகக்கடவுளுக்கும் விசேஷ தினமாகக் கருதப்படுகிறது. அன்று பக்தகோடிகள் காவடி முதலியவைகள் எடுத்து முருகனை வழிபடுவர். ஆதலின் இச்சிறப்பும் கூடியதாகத்திகழ்கின்றது அன்றைய தினம்—ப—ர்.]

---

* இச்செய்யுள் கம்பன் செய்யுள் அன்று; ஆனால் அவனது அழகிய பொன்னுள்ளத்தை ஒருவாறு வெளியிடுகின்றதெனலாம்.

சிறுவர் உலகம்.

கள்ளம் வெளியாயிற்று.

(பாட்டி எழுதியது.)

அடாணா ராகம்——ரூபகதாளம்.

1. வானிலுலவிடு வெண்மதி! என்னிடம்
மகிழ்ந்தேனோ ஆடவாராய்?
கலைமானி னுறவுதான் மேலாகக் காணுதோ
மறையாமல் நீமொழிவாய்.

2. தேனூர்ந்த பூங்கொடி யார்முகங்கண்டுநீ
சீ சீ வெட்கமேன் கொள்ளுகின்றாய்?
இல்லைக் கானக மானினைக் களவாடிவந்ததால்
கள்ளமும் பிடிக்குதோ.

3. கொஞ்சங் கொஞ்சமாக நாளுக்கு நாளாக
குன்றியேன் மறைந்திடுறாய்?
பொல்லா வஞ்சகமாநிலை பிடித்தழுத்துதோ
வகையினைக் கூறிடுவாய்.

4. மேகத்தட்டத்திலே முங்கிமுங்கி யேனோ
வேதனை கொண்டிடுறாய்?
உன் சாகச குணத்தை யிப்போதே நீக்கிடு
சந்தோஷம் பெற்றிடுவாய்

5. மக்கள்களாடிடப் பொம்மைகள் உள்ளன
மங்கை யருன்தனைக் கட்டிவையார்.
நம் முக்கண்ணன் கணேசன் நீ நகை யீந்ததை
முற்றுமே தானயர்ந்தான்.

6. பாம்புகள் தீண்டாது பயத்தை விட்டிடு
பயின்றிடு நன்னெறியை
துதியாம்பலுங் குமுதமும் ஆசையாய்ப் பார்க்குது
அருகிலே வந்திடுவாய்.

2; பெரியாழ்வார்பிரபந்தம்.

1. பொய்கை பூதம் பேயென்னப் புகல வரிய முதலாழ்வார்
செய்ய கமலத் திருவடிக டிருந்த விறைஞ்சித் திருவருளான்
மெய்கொள் புதுவை நகர்வந்த விஷ்ணுசித்தன் க்தைவிரிவை
யையம்புலனா லலைப்புண்ணு மடியேனறிந்தபடியறைவேன்.

வேறு.

2. விண்ணாட்டு ளந்தாம வியன்புரிசை வேந்தனுக்கு
மண்ணாட்டு ளான்மாவாந் தவசமருள் வழிநடத்தி
பெண்ணாட்டு மூவர்களு மேகியபின் னிருநிலத்தின்
கண்ணாட்டி நீங்காத களப்புலனாய்க் குறும்புசெய்யும்:

3. வேடர்களோ ரைவர்களு மேதினியின் மிக்கவிருட்
காடுமலை யன்றிவெளி யேயிடமாய்க் கவித்திலங்கு
நாடுமதின் கீழாய நற்பதியு நசிப்பித்து
மூடவிலங் கவைசாத்தி முடித்தனர்கள் புவிமுழுதும்.

4. அத்திறத்தார் புவிமுழுது மல்லலுறும் படிகண்டு
மெய்த்திறத்தான் மெய்விட்டில் வீற்றிருந்தே யுலகாள்வான்
பொய்த்திறத்தார் புலைச்சர்ப்பம் பொடியாகக் கருடனைத்தன்
சித்திரத்தாற்பெரியாழ்வா ராயுலகைத் திருத்தென்றான்.

5. என்றிறைவ னருள்புரிய விறையருளுந் திருவருளு
மொன்றியசீ ரன்பினு டன்கொண்டு புவியிலிறை
சென்றுதுயில் கொண்டவருட் சிறந்தவில்லி புத்தூரி
னன்றிதரும் வேதியரிற் சோழியரென் றேநவிலும்.

6. குலத்தினெறி யுடைமுகுந்தர் தந்தையாய்க் கோதில்வா
நலத்தினார் தேவியார் பற்புமைநற் றாயாராய்
நிலத்தினிருள் கெடத்தோன்று மருக்கனென நிலவுமுயிர்
புலக்கூடா நிசியொழிக்கும் போதமாக் கதிரவனாய்.

7. ஆனியெனுந் திங்களினில் வளர்பிறையிலருஞ்சோதி
மேனியனார் சோதியினில் விண்ணவர்பூ மழைசொரிய
வானில்வரு முகிலொலியு மறையொலியு மாறுசெயப்
பானிலா முகத்தியர்கள் பல்லாண்டி னிசைபாட.

8. அறந்தழைப்ப மெய்ஞ்ஞானம் யாவர்களு மறிந்துய்ய
மறந்திய வேரோடு மடியவஞ்சம் பாழாகத்
திறந்திறம்பா துயர்ந்தோங்கத் தீவினைகால் குலைந்தோட
வுறங்கினா னாடுகடா வீனாதே யுயிர்நோக்க:

9. திருவவதாரஞ்செய்தார் செகமுழுது மீடேற
மருவமரும் பொழிற்புதுவை வடபெருங்கோ யிலானன்று
தருகுழவி தனைநோக்கிச் சதஞ்சீவ னெனவாழ்த்திப்
பொருவவருக் கவரேயாய்ப் புவிமீதில் வளர்ந்திடுநாள்.

10. பூதமுத னாயகன் சீர்ப் பூங்கழற்கீழ்ப் பசுந்துளவா
லேதமிலாப் பூமாலை பாமாலை யெனுமிரண்டு
மாதரவி னாற்கட்டி யருளவல்ல வாழ்வார்க்கு
வேதநெறி விஷ்ணுசித்த னெனுநாமம் வியந்துரைத்தார்.

11. தருக்காக்கு மிந்திரனுஞ் சதுமுகனுஞ் சராசரமு
மெருக்காக்குஞ் சடையானு மிறைஞ்சவெய்தா திடர்க்கரியி
னுருக்காக்கும் பெருமானை யுவந்துபல்லாண் டெனவோதித்
திருக்காப்பன் றிடுவார்க்குத் திருக்காப்புஞ் செய்தனரால்.

வேறு.

12. பூதத்தனி நாயக னாயலையார் புனலூட்டுயிலும் புயன்மேனியி
னாய்
வேதத்தனிநாயகனே யெனவான் விடையாரயனார்
விண்ணோர்கோமா
னோதிக்கரை வாரறியானெறியா னுலகிற் றமர்கட்குதவுந்
திருமால்
பாதக் கமலங்காணீரென்றார் பாதக்கமலங் கண்டார் பலரும்.

வேறு.

13 ஒத்தவரு மிக்கவரு மன்றியொளி ரும்பன்
னோதமவை யேழுமுல கேழு மலையேழு
மித்திறம லாதுபிறி தில்லையென வொல்லை
யின்பமுறு மீரடியி னாலுற வளந்தான்

முத்துநிறை யன்னநக பத்திகள் விளங்கு
மொய்ம்மல ரினும்மிருது வாமுளரி யந்தாட்
பத்துவிர லுங்காண்மி னென்றவர் பதத்திற்
பத்து விரலுந் தொழுது பத்தர்கள் பரிந்தார்:

வேறு.

14. விணைக்கா றீயொடு மிக்கவி ரண்டை
வேதனை யாலமிடற்று னுரைப்
பணைக்கா னுன்மறை யைப்பக லோனைப்
பலவைக் கனிவா யுறவுண் டுறவோர்
துணைக்கா லாகக் கொண்டிலை மீதிற்
றுயிலும் பெருமா டிருமா லழகார்
கணைக்கால் காண்மி னெனக்கசி வோர்தங்
கணைக்கால் கண்டு களித்தன ரன்பர்.

வேறு.

15. பாராளு நூற்றுவரைப் பாழாக்கிப் பாண்டவருக்
காராத வின்ப மருளப் பிறந்த பிரான்
சீரார் கருணைத் திருமுழந்தாள் காண்மினென்று
னோரார் முழந்தாள் யாவருங்கண் டின்புற்றார்:

16. வங்கக் கடற்றுயின்ற மாமான் மதுசூதன்
வெங்கட் களிறடர்த்தாண் டைவர்களை வெல்லுவித்த
செங்கமலக் கண்ணன் றிருக்குறங்கு காண்மினென்று
னங்கக் குறங்கை யனைவருங்கண்டாதரித்தார்.

17. புன்புலத்தார் பாரம் புவிமடந்தை யாற்றரிதென்
றன்புறநின் றேத்த வவனியின்கட் போந்த பிரான்
மின்பொறுத்த ஜோதி விளங்கு முத்தங் காண்மினென்று
னின்பமுறு முத்தம் யாவருங்கண் டின்புற்றார்.

18. வையமுழுதும் வயிற்றுள்வைத்துத் தேவகியா
ருய்ய வழகா ருதரத் துதித்த பிரான்
மைய னையஜோதி மணிமருங்குல் காண்மினென்ற
வையன் மருங்கை யனைவருங்கண் டாதரித்தார்.

19. சத்தம் பரிச முருவந் தரைக்கந்த
மொத்த குரம்பைதொறு முட்டியென்னை யாட்டுவிக்கு
மத்தன் றிருவுந்தி யாயிழையீர் காண்மினென்ற
நித்தனெழி லுந்தி கண்டு நீணிலத்தோர் வாழ்த்தினர்.

20. கொல்லு மதவானைக் கோடுங் கொடியவிறன்
மல்லுந் தொலைப்ப வட மதுரை வந்துதித்த
செல்லுருவ மன்னன் றிருவுதரங் காண்மினென்று
சொல்லும் பிரானுதரம் போற்றினர் தூயோரே.

21. சங்கக் குழையான்கைச் சாபந் தவிர்த்திரைக்கும்
பொங்குகடலேழும் பொடிசெய்து வந்தபிரான்
செங்கமலை தங்குந் திருமார்பு காண்மினென்றான்
பங்கமில்லா மார்பழகு கண்டார் பரிவோடே.

வேறு

22. பெருத்தோங்கு நூற்றுவர் மாளப் பிறந்த
குருத்தோங்கு நான்மறைக் கோவலர் குட்டன்
றிருத்தோளிருந்தவா காணென்றான் றோள்கள்
கருத்தோங்கு மன்பர்கள் கண்டார் களித்தே.

23. சூழவிசும்போடுமுன் றெல்லுல குண்டவன்
ஆழியுஞ் சங்கு மடங்கு கரங்களை
பேழையர் காண்மின்க ளென்றவன் கைத்தலம்
பாழிய மண்ணவர் கண்டு பணிந்தார்.

24. பெருக்கண்ட முட்டிப் பிறங்கிய பொன்ன
னுருக்கண்டங் கண்டே மூலகுமுண் டான்றன்
றிருக்கண்டங் காணென்ற சேய்களங் கண்டு
கருக்கண்டங் கண்டனர் கற்றறிந் தோரே.

25. முன்றொண்டை தண்டாமன் மூவுலகு முண்டவன்
செந்தொண்டை வாய்காண்மி னென்றுபின் செப்பமுன்
றன்றொண்டு தானே சகியாய்ப் பிறந்தவ
னின்றொண்டை வாய்கண்டி யாவர்களு மின்புற்றார்.

26. பூக்குந் திருவுந்திப் பூவை நிறத்தமலன்
வாக்கு நயனமும் வாயு மிறு வலுஞ்சீர்
மூக்கு மிருந்தவா காணீரென்றான் முகத்தி
லாக்குமதுவதுகண் டந்தணர்கள் வாழ்த்தினர்.

உ

இராஜபுத்திரர் சிறப்பு.

சுராஜ்யபேரிகைஆசிரியர்

(M. S சுப்பிரமணிய அய்யர்)

எழுதியது.

வில்லுக்கு விஜயன், விறலுக்கு விமன் என்பர்-வீரத் தீரத்தினுக்கோ இராஜபுத்திரர் என்போம் நட்பும் தயையும் கொடையும் பிறவிக்குணங்களாம். அங்ஙனமே வீரதீரம். அம் மக்களின் இயற்கைக் குணவிசேஷமாகும். மத்திய இந்தியாவிலுள்ள இராஜபுதனதேசமே அவ்விராஜபுத்திரரின் வாசஸ்தலம்; அன்னார் ஆதிகால சூரிய, சந்திர குலத்தின் வழிவந்தோர் ஆவர்; தொன்று தொட்டு நம் தேசத்தின் வடபாகத்திலே முடிவேந்தராகவும், வெற்றிவீரராகவும் விளங்கும் பெருமை அன்னவருக்கு உரித்தாகும்.

கவரிமான் தனது வால் கற்றையின் மயிர் ஒன்றை இழப்பினும் உயிர்வாழாது. மானம் படவரின் இராஜபுத்திரர் உயிர் வாழ விரும்பார்; உடைவாள்கொண்டு சமர் புரிந்து, உயிர்விடுத்து, வீரசுவர்க்கம் புகுவர். தொட்டில் பழக்கம் சுடுகாட்டுமட்டில் அல்லவா? அங்ஙனமே குழந்தைப்பிராயம் முதல் குதிரை ஏற்றத்திலும், வாட்போரிலும் அன்னவர் அரும்பயிர்ச்சிபெற்று, ஆருயிர் போமளவும் ஆண்மையுடன் விளங்கவே விரும்பி நிற்பர். போர்முகத்தில் புகுவரேல், அவ்வீரபுருஷர் வாகை சூடித்திரும்புவர்; இன்றேல் இணையிலா வீரங்காட்டி ஆவி விடுப்பர். படைமுகத்தில் புறங்கொடுத்தல் என்பதை அன்னவர் ஒருநாளும் அறியார்.

குலத்தலைவனுக்குக் குற்றேவல் புரிதலும், தேசத்தலைவனிடம் விசுவாசங்கொள்ளுதலும் இராஜபுத்திரரின் இயற்கை நலம். அப்பக்திக்குரிய சோதனைக்காலம் நேரின் தமது உடல் பொருள் ஆவி மூன்றையும் ஒருங்கே வழங்க அப்பெருமக்கள் தயங்கார். அவனிகாவலன் தெய்வம்போலாவான் என்பதே அவர்தம் கொள்கை. எத்தகைய இடுக்கண் நேரினும், தாம் ஏறிச் செல்லும் பரிமாவையும், உருவி வீசும் உடைவாளையும், அன்

னவர் கைவிடார். அவ்விரண்டும் அவர்களுக்கு உயிரினும் சிறந்தனவாம்.

ஆண்மகன் பிறக்கவேண்டுமென இராஜபுத்திரர் தவங்கிடப்பர். அம்மைந்தனுக்குத் தனது பரிமாவையும் பட்டாக்கத்தியையும் பெரும்பொருளாகக் கொடுத்துச்செல்ல விரும்பாத இராஜபுத்திரன் இரான். குறுநடைகொள்ளத் தொடங்கியதும், குழந்தையைக் குதிரையின்மீது ஏற்றிவைத்து அன்னவர் பழக்கிவருவர்; பட்டாக்கத்தியை எந்தப்பருவம் இல்லாதகாலத்தில் குழந்தைகளிடம் சிறிய வாள்கொடுத்து வீசச்சொல்லிச் சீராட்டுவர்.

வேட்டையாடுதலில் அவர்களுக்கு விருப்பம் அதிகம். எத்தகைய வனவிலங்காயினும், அதனை வேல்கம்புகொண்டு மாய்க்க முனைந்து நிற்பர் இராஜபுத்திரர். முள்ளம் பன்றியைக்கண்டுவிடின், அவர்களுக்கு பரமானந்தம் பிறக்கும். பரியின்மீதிருந்த வண்ணம் அப்பன்றியைத் தாக்கிமாய்ப்பதில் எவ்வித மெய்வருத்தத்தையும் அன்னவர் பாரார். சில சமயங்களில் அவ்வேட்டையிலே உயிர்போக நேரினும், அது அவர்களுக்கு ஒருபொருட்டன்று.

தொட்டவளவில் அனிச்சமலர் வாடிவிடும். அதுவேபோல் இம்மியளவேனும் பிறர் தீங்கிழைப்பின், இராஜபுத்திரர் வெகுண்டெழுந்து பழிவாங்குவர்; பகைமுடித்தபின்பே, பிறகருமங்களில் அவர்களுக்கு நாட்டம் பிறக்கும். பழிவாங்கும் காலத்து இன்னான் இனியான் என்று அன்னவர் எண்ணிப்பாரார். இருவருக்கு இடையே கொடும்பகைநேரின், ஒருவன் தன் மகளைத்தர மனமொப்புவனேல் மற்றவன் அன்னவன் பகையொளித்து பெருந்தோழனாகிவிடுவான்.

மரபின் மானத்தையும் மக்களின் நலத்தையும் உயர்வையும் கருதி, இராஜபுத்திரவேந்தரும் வீரரும் ஆற்றிய சமரும், விளைத்த வீரமும் எண்ணில் அடங்கா; எட்டில் எழுதமுடியா. இப்பாரத பூமியிலேபடைகொண்டு புகுந்த அன்னியரைஅண்டவிடாது அருஞ்சமர் ஆற்றிய புகழ்ப்பெருமைக்கு அன்னாரே பாத்திரமாவர். அழியாச்சிறப்பும் இணையிலா ஆற்றலும் படைத்த அம்மக்கள் நம் தேசசரித்திரத்தில் சிறப்புடன் பேசப்படுவர். சுருங்கச்சொல்லின் வீரச்சுவையும் இராஜபக்தியும் சுதந்திரப்பற்றும் அம்மக்களையே விளைநிலமாகக் கொண்டன என்று இயம்ப வேண்டும்.

இராஜபுத்திர ஆடவர்மட்டுமன்று, பெண்டிரும் வீரத்தின் பிறப்பிடமாவர். அவசியம் நேர்ந்தகாலத்து, ஆண்வேடந்தாங்கிப்

போர்க்கோலம் பூண்டு ஆடவருடன் இரணகளஞ் செல்ல இராஜ புத்திர மாதர் முனைத்து நிற்பர். தாராபாய், ஸம்யுக்தை முதலிய மாதர்மணிகள் நிகழ்த்திய போர்த்திறங்கண்டு, பகைவரும் மன மாரப் புகழ்ந்து பேசியுளர். கற்பு என்பதே அம்மங்கையரின் அணி கலன், கொழுநன் இறப்பின், உடனே அக்குலமாதர் தீயிள்குளித்து ஆவிதுறப்பர்.

பகைவன் கைமேலாகி, வாகைசூடிவிடுவன் எனக்கண்ட தும், இராஜபுத்திரமாதர் அனைவரும் மங்கள நீராடி புத்தாடை பூண்டு அம்மை பவானியை வழுத்திக்கொண்டு அருவியில் ஆடச் செல்வதுபோல் ஒருவர் பின் ஒருவராக அக்கினி குண்டத்தில் குதி த்து விடுவர். ஆடவரோ அரையில் மஞ்சள் உடை தரித்து மாற் ருன் மீது பாய்ந்து ஆவி போமளவும் அருஞ்சமர் ஆற்றி வீரசுவ வர்க்கம் செல்வர்.

எட்டாம் நூற்ருண்டுமுதல், பன்னிரண்டாம் நூற்ருண்டு வரையில் இராஜ புத்திரரே வட இந்தியாவில் ஆண்மையுடன் ஆட்சி செலுத்தி வந்தனர். அக்குலத் தலைவர்கள் தம்முள் ஒற் றுமைகொள்ளாமல் தனித்தனியே நின்று தனியரசுகாண முயன்ற தனுல்தான் அந்நாளில் முகம்மதியர் இத்தேசத்திலே ஆட்சிபுரிய நேரிட்டது. எனினும், அத்தலைவர்கள் தனித்தனியே முகம்மதிய ருடன் நெடுங்காலம் போர்புரியத் தவறவில்லை. அன்னவரின் அரிய வீரத்தைக்கண்டு வியந்த முகம்மதிய மன்னர், தமது மதி வன்மையினுல் சாமதான பேததண்டம் எனும் நால்வகை உபா யங்களையும் கையாண்டு, இராஜபுத்திரரை மடக்கி, அரசை அரும் பாடுபட்டு நிலைநாட்டினர். எனினும் இராஜபுதன நாடுகளில் சிற ந்த மேவார் எனும் நாடோ கடைசிவரையில் மாற்றரசருக்குத் தலைவணங்காமல் தருக்கி நின்றது. அதனுல் அம்மேவார்நாடு அடைந்த கஷ்டநஷ்டம் அளவிட்டு உரைக்கற்பாலதன்று. மானமே பூஷணமாகக்கொண்ட மேவார் அக்கஷ்டநஷ்டங்களைப் பொருட் படுத்திலது.

(தொடரும்)

ஓம்:

சிறுவர் பகுதி

க. அ. கந்தசாமி செட்டியார்.

கெடுவான் கேடு நினைப்பான்.

ஒருவன் பிறருக்கு கேடு நினைத்து அவனைக்கெடும்படி செய்தால் தானே சீக்கிரத்தில் கேட்டில் சிக்கிடுவது நிச்சயம் ஆகையால் தான்பெரியோர்.— "கெடுவான் கேடு நினைப்பான்" என்றும்; "தன்வினை தன்னைச்சுடும்!" என்றும் கூறினர்.

மேலும் "கேடுவரும் பின்னே மதி கெட்டுவரும் முன்னே" என்னும் முது மொழியை நாம் ஆராய்ந்து நோக்கின் — "நமக்கு கேடு பின்னே வரவிருக்கின் நமது மதியானது முன்னதாகவே நம்மைக்கெடுத்து பிறருக்குத் தீங்கு செய்யும்படித் தூண்டி விடுகின்றது! நமது மதிக்கேட்டால் நாமும் கேட்டிற்கே உட்பட வேண்டியதாகவே முடியும்!

சிறுவர்காள்! நாம் பிறருக்கு ஒரு போதும் தீங்கு—கேடு செய்தல் கூடாது! நேயத்தோடும் பட்சமாகவும் நடந்து வருதல் வேண்டும்! அவ்விதம் நேயமாய் நடந்தால் அவர்களும் நம்மை மிக அன்போடு நேசித்து நமது தீங்குகளை நீக்கிவிடுவரென்பது திண்ணம்.

பாலர்காள்! ஒரு வழிப்போக்கன் ஒரு ஸ்திரீயைக்கொன்று அவளுடைய நகைகளைத் திருடிய அந்தஇடத்திலேயே அவனேரு பாம்பாற் கடியுண்டு இறந்தான். அப்படியே நாமும் பிறருக்குத் தீங்கு செய்தால் அவ்விதமாகிய கேடே இம்மையில் அடையாவிடினும் மறுமையிலேனும் அடைவோம்! ஆகவே அன்பர்காள்! நீவிர் யாவருக்கேனும் எவ்வித கேடும் செய்யக் கனவிலேனும் நினையாதீர்.

"கேடுநீர் நினைத்தி ராகின்
கேடதே யடைவீர்! அன்பீர்!!

விடுநீர் பெறவே வேண்டின்
கேட்டினை நீக்கு வீர்காள்!!!"

உ

கஜபதிசிங் அல்லது

மேனாட்டுத் துப்பறிபவன்.

கரிசூழ்ந்தமங்கலம், K. சங்கரநாராயணன்
எழுதியது.

வீதியை நோக்கியிருக்கும் அறையில் கஜபதிசிங் அங்குமிங்கும் நடந்து சென்றுகொண்டிருந்தார். "நண்பரே! அதோ பாரும் ஓர் பயித்தியம் வீதி வழியாய் வந்துகொண்டிருக்கின்றது. இம்மாதிரி மூளை பிறண்ட மனிதனை வீதி வழியாய் அலையும்படி விட்ட அவனுடைய உறவினர்களும் மனைவிமக்களும் பெரிய மூடர்கள்!", என்று வீதியை உற்று நோக்கிக்கொண்டிருந்த வேணு (சஜபதிசிங்கின் சீடன்) கூறினான். மேனாட்டுத்துப்பறியும் நிபுணராகிய கஜபதிசிங் சட்டென்று வீதியை நோக்கினார். மாலை [illegible] மணியானாலும் கதிரவன் கொடுமை தணிந்தபாடில்லை. வீதியில் ஜனங்கள் நடமாட்டம் மந்தமாகவே தோன்றியது. ஆயினும் மிரள மிரளக் கண்களை விழித்துக்கொண்டு, கைவிரல்கள் பதற, உதடு துடிக்க ஓர் மனிதன் குடையின்றியும், பாதரட்சையின்றியும் வேகமாக நடந்து வருவதுதான் வேணுவின் கவனத்தைக் கவர்ந்தது.

அம்மனிதர் நாற்பத்தைந்தாண்டைக் கடந்தவர் போன்று காணப்பட்டார். சற்று உயரமானவர்; வட்டமான வதனம் படைத்தவர், நாணயமான ஆடை அணிந்தவர். ஆயினும் கல்வியறிவுள்ள மேன் மக்களில் ஒருவர் போன்று காணப்பட்ட அம்மனிதர் நடந்து வரும் மாதிரி வேணுவின் மூளையில் அவரைப் பயித்தியம் பிடித்த ஒருவர் போன்று காட்டிற்று. திடீரென்று அவர் ஓடினார்; சட்டென்று நின்றார்; ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தார் 'கோட்' (Coat) பைக்குள் கரங்களை விட்டார்; வலது கரத்தை

வெளியிலெடுத்து தலையில் அடித்துக்கொண்டார் புருவத்தைத் தடவிக்கொடுத்தார்; "ஐயோ! ஐயோ!" என்று கூக்குரலிட்டார். "நீர்தான்—நீர்தான்—அவரே?", என்று எதிர்ப்பட்ட மனிதர் களிடங்கேட்டார். இவருடைய மாறுபட்ட செய்கைகளை துப் புறியும் சிங்கமும், அவருடைய சீடனும் கூர்ந்து கவனித்தனர்.

வேணு:— அவனுடைய பயித்தியத்தின் காரணமென்ன? ஒவ்வொரு வீட்டின் நம்பரையும் பார்த்துக்கொண்டே வருகின் றனே?—என்றன்.

கஜபதிசிங்:— எல்லாம் நம்மைத்தேடித்தான்—என்று சிரித் துக்கொண்டே பதிலளித்தார்.

வேணு:— நம்மைத்தேடியா?-என்று கேட்டான்.

கஜபதிசிங்:— அவனுடைய வதன மாறு பாடல்களின்றும் எக்காரணத்தைக்கொண்டு இவ்வீதிவழியாய் வருகின்றனென்பதை ஊகித்துவிட்டேன். சொந்த வேலையின் நிமித்தம் நம்மைக்கலந் தாலோசிக்க வருகின்றன்—என்றுகூறி முடிக்கு முன்னமேயே அம்மனிதர்; 'செத்தேன் பிழைத்தேன்', உன்று கூறிபவண்ண மாய் அந்த அறைக்குள் நுழைந்தார்.

அவருடைய கவலையும் ஆத்திரமும், வியப்புந் திகைப்புங் கலந்ததோற்றம் கஜபதியின் மனதில் தயாளகுணத்தை உண்டாக் கிற்று. வேணுவும் பதறிவிட்டான். சிறிது நேரம்வரை அவர் மௌனமாகவே இருந்தார். சொல்லொணுத் துயரடைந்தவன் போன்று மண்டையிலறைந்துகொண்டார். பிறகு திடீரென்று சுவற்றைநோக்கி ஓடிச்சென்று, துப்பறியும் மனிதனின் ஹிருதயம் வெடிக்கும்படி படீரென்று மோதிக்கொண்டார். ஆனல் மறுபடியும் அவ்வாறு செய்வதற்குமுன் வேணு அவரை ஓர் சாய்மான நாற் காலியில் வீழ்த்தினன். "உங்களுடைய பரிதாபகரமான கதையைக் கூற என்னைத்தேடி வந்திருக்கின்றீர்கள். விரைவாய் கதிரவன் வெப்பத்தில் ஓடிவந்திருப்பதால் மிகவுங் களைத்துப்போய் விட்

டீர்கள். மனம் ஓர்நிலைமையை அடையும்வரை மௌனமாக வீற்றிருங்கள். பிறகு உங்களுடைய கதையைக் கூறலாம்," என்று கஜபதிசிங் கூறிக்கொண்டே ஓர் சிகரட்டைப்பற்றவைத்தார்.

படபடவென அடிக்கும் ஹிருதயத்துடன் அம்மனிதர் இருநிமிடங்கள் மௌனமாக இருந்தார். கைக்குட்டையை எடுத்து, முகத்தினிள்ள வியர்வையைத் துடைத்துகொண்டு, கீழ் அகாத்தைக்கடித்த வண்ணமாய் கஜபதிசிங்கைக் கூர்ந்து நோக்கினர். "என்னைப் பித்தனென்று நீங்கள் தீர்மானமாய் எண்ணுவீர்கள்", என்று திடீரென்று கஜபதியை நோக்கி கூறினர்.

கஜபதிசிங்:— இல்லை. பெரிய ஆபத்தில் சிக்கொண்டிருக்கிறீர்களென்று நினைக்கின்றேன்—என்ருர்.

அம்மனிதர்:— எனது சங்கடத்தைக் கடவுள்தான் அறிவார். எனது புத்தியைக் கலக்கக்கூடிய கொடிய விபத்து அது திடீரென்று ஏற்பட்டது; பயங்கரமானது இதுவரை குற்றத்தில் அகப்படாத நான் பெரிய அவமதிப்புக்கு அஞ்சேன். மனிதப்பிறவிக்கு ஏற்படக்கூடிய துன்பங்களையும் பொறுப்பேன். ஆனல் இவ்விரண்டும் திடீரென்று மலைப்பிரமாணத்தைப்போல் எழும்பி எனது ஆவியையும் உடலையும் ஆட்டியலைக்கின்றன. நான் மாத்திரம் இக்கொடிய துன்பத்துக்கு பலியாகவில்லை. இச்சென்னை மாகாணத்தில் நற்பெயருடன் விளங்கிவரும் ஓர் கனவானும் இவ்வாபத்திற் சிக்கிக்கொண்டிருக்கின்றேன்—என்று பெருமூச்சுவிட்டுக்கூறினர்.

கஜபதிசிங்:— கலவரப்படக்கூடாது சாவதானமாய் அமர்ந்துகொண்டு நீங்கள் யாரென்பதையும், எவ்வித ஆபத்தில் சிக்கிக்கொண்டிருக்கிறீர்களென்றுங் கூறுங்கள்—என்று கூறி சிகரெட்டை உறிஞ்சினர்.

அம்மனிதர்:— எனது பெயர் உங்களுக்கு நன்ருகத்தெரிந்திருக்கும். 'நாராயணசாமி—கோவிந்தசாமி' என்ற பாங்கின் சொந்தக்காரரான நாராயணசாமி நாயுடுவே கஜபதிசிங்கைத்தேடி வந்திருக்கின்ருர்—என்றுரைத்தார்.

கஜபதிசிங்:— நாராயணசாமி நாயுடுவா! நிரம்ப சந்தோஷம்!

நாராயணசாமிநாயுடு:— நேரம் விலைமதிப்புடையது. உங்களைத் தேடிச்சென்றாற்தான் எனது கதி விமோசனமாகுமென்று இன்ஸ்பெக்டர் பொன்னுரங்க முதலியார் கூறினதும் இங்கு ஓடிவந்தேன். இந்த வெய்யிலில் குதிரைவண்டி கூட மெதுவாகத்தான் ஓடுமென்று நினைத்து நான் வெப்பத்தையுங் கவனியாமல் விரைந்தோடி வந்திருக்கின்றேன். எனது ஆவியே உடலை விட்டுப்பிரிந்து விட்டதென்று கூறலாம். ஆனால் உங்களைத் தரிசித்த பிறகுதான் உயிர் வரத்தொடங்கிற்று. இப்பொழுது எனது மனக்கலக்கம் சிறிது குறைந்திருக்கின்றபடியால், எனது கதையைச் சுருக்கமாயும் தெளிவாயும் என்னாற் கூடியமட்டும் எடுத்துரைக்கின்றேன்.

பாங்கின் முக்கியமான வேலைகளைப் பற்றி உங்களுக்கு நான் எடுத்துரைக்க வேண்டிய அவசியம் இல்லை. எங்களுடைய பணத்தை அதிக வட்டிக்கு நம்பிக்கையுள்ள மனிதர்களுக்கு கொடுப்பதும், குறைந்த வட்டிக்கு ஜனங்களிடமிருந்து பணம் சேகரிப்பதும் எங்கள் முக்கிய வேலை. எவர் வில்லங்கமில்லாத அடமானங்களைக் கொடுக்கின்றாரோ, அவருக்கு நாங்கள் பணத்தைத் தயங்காமல் நாங்கள் அளிப்பதுண்டு. கடந்த சில வருடங்களாக ஒருவித குற்றங்குறையின்றி நாங்கள் கடைநடத்தி வருகின்றோம். பெரிய ஜமீன்தார்களும், பிரமுகர்களும் நாணயமான ஆதாரங்களை வைத்து எங்களிடம் கடன் வாங்கிச் சென்றிருக்கின்றனர். நேற்று காலை நான் ஆபீசில் வழக்கம் போலமர்ந்து கொண்டு வேலைகளைக் கவனித்துக்கொண்டிருந்த சமயம் வேலைக்காரன் ஒரு பெயர் அச்சடிக்கப்பட்ட கடுதாசியைக் கொடுத்தான். நம்முடைய யானைப்பட்டி ஜமீந்தார்—அவர்களுடைய பெயரைக்கண்டதும் என் மனது பூரித்துப்புளகாங்கிதமடைந்தது. அவர் உள்ளே நுழைந்ததும் வேண்டிய மரியாதைகள் செய்து தற்கால ராஜீய நிலைமையைப்பற்றி சம்பாஷிக்கத் தொடங்கினேன். ஆனால் ஜமீந்தார் தான் வந்த காரியத்தைத் தெரிவிக்க ஆரம்பித்தார். "நாராயணசாமிநாயுடு! ஆதாரங்களை வைத்துக் கொண்டு நீங்கள் ரகசியமாக பணப்போக்குவரத்து நடத்துகிறீர்களென்று கேள்விப்படுகிறேன்" —என்றார்.

(தொடரும்)